Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No. CC.No.131 /2017

**DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS No.11**

| Name : | அதிசயராஜன் | Calling: | விவசாயம் |
|---|---|---|---|
| Father's Name: | அண்ணாமலை | Religion: | இந்து |
| Village: | கொல்லகொட்டாய் | Age: | 59 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 12.12.2022

SIGN :

அ.சா. 11 முதன்மை விசாரணை.

நான் கொல்லகொட்டாய் கிராமத்தில் வசித்து விவாசயம் வேலை செய்து வருகிறேன். ஆஜர் 4 மற்றும் 5 வது எதிரிகள்இருவரும் என்னுடைய தங்கை மகளின் அக்கா மற்றும் அக்கா கணவர் ஆவார். 1ம் எதிரி என் தங்கை மகளின் கணவர். 2மற்றும் 3 வது எதிரியை தெரியும். பூவிழி என்பவரை தெரியும். சுமார் 6 வருடத்திற்கு முன்பு அசா 1 பூவிழிக்கும் 1ம் எதிரி வேல்முருகனுக்கும் திருப்பத்தூரில் நிச்சயதார்த்தம் நடந்தது. நாட்றம்பள்ளி அடுதது ஒரு மண்டபத்தில் 2016 ம் வருடம் திருமணம் நடந்தது. அவர்கள் இருவரும் திருமணத்திற்கு பிறகு சந்தை வாசல் அருகே குடியிருந்து குடித்தனம் நடத்தி வந்தார்கள். அதன் பின்னிட்டு சுமார் 3 , 4 மாதங்கள் கழித்து 1ம் எதிரிக்கு ஏற்கனவே ஒரு பெண்ணுடன் திருமணம் நடந்து ஒரு குழந்தை இருப்பதால் கருதது வேறுபாடு உண்டாகி திரும்பி வந்து நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தார்கள். இது சம்மந்தமாக போலிசார் வந்து விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை.

(4 மற்றம் 5 எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.ஜி.பூபதி என்பவர் அசா11 ஐ குறுக்கு விசாரணை செய்ய முற்பட்ட போது நீதிமன்றத்தில் வழக்கறிஞர் திரு.செந்தில்வேலன் என்பவர் 4 மற்றும் 5 ம் எதிரியை குறுக்கு விசாரணை செய்ய முற்பட்ட வழக்கறிஞர் திரு. ஜி.பூபதி என்பவர் ஜி.பி. ஆக உள்ளதால் அவர் எதிரிகள் தரப்பில் ஆஜராகி குறுக்கு விசாரணை செய்ய முடியாது என ஆட்சேபனை தெரிவிதத்தின் அடிப்படையில் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது.

மீண்டும் வழக்கை குறுக்கு விசாரணைக்காக மாலை 04.30 மணி அளவில் இந்நீதிமன்றம் எடுத்துக்கொண்ட போது வழக்கறிஞர் திரு. பூபதி ஆஜராகி எனது மூத்தவழக்கறிஞர் திரு.டி.இ. கலீல் என்பவருக்கு பதிலாகத் தான் நான் குறுக்கு விசாரணை செய்ய முற்பட்டேன் என நீதிமனறத்தின் முன் தெரிவித்தார் அதனால் இந்நீதிமன்றம் அவரை குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கபடவில்லை. )

தற்போது 1 முதல் 3 எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் குறுக்கு விசாரணை.

புகார்தாரர் யார் என்று எனக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல அவர் பெயர் பூவிழி. பூவிழி எனக்கு என்ன உறவு என்றால் தங்கை மகள் ஆவார். என்னுடைய தங்கை மகள் சொன்னதின் அடிப்படையில் தான் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். நான் பூவிழி கூறியதின் அடிப்டையில் தான் சம்பவம் குறித்து எனக்கு தெரியவந்து சாட்சியம்அளிக்கிறேன் என்றால் அது சரியல்ல எனக்கு தெரிந்ததை தான் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் புகார் கொடுத்துள்ளேன் என்றால் இல்லை. நான் லாலாபேட்டை மொல்லன்வட்டத்தை சேர்ந்தவர். எனது தங்கை மகள் பூவிழி சந்தைவாசல் என்ற ஊரில தான் திருமணத்திற்கு பின்பு இருந்தார் என்றால் சரிதான். அவர்கள் இருவரிடையே கருத்து வேறுபாடு காரணமாக தான் பிரச்சனை என்றால் சரிதான். போலிசார் என்னிடம் பெயர், விலாசம், வயது, பெற்றோர் பெயர் கேட்டு கொண்டார்கள் தனியாக விசாரித்து வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். நான் எனது தங்கை மகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது பூவிழி எனது உறவினர் என்பதால்நான் சாட்சியம்அளிக்க வந்துள்ளேன் என்றால் அது சரியல்ல. ஆகையால் எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இலலை என்று சொன்னால் சரியல்ல.

(4 மற்றும் 5 எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் திரு.குமரன் என்பவர் அரவது மூத்த வழக்கறிஞர் திரு. டி.இ. கலீல் என்பவருக்கு ஆஜராகி அவர் திருப்பத்தூர் நீதிமன்றத்தில் உள்ளதால் அவரால் குறுக்கு விசாரணை செய்ய முடியவில்லை என்று என்னை ஆஜராகி 1 முதல் 3 எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் செய்த குறுக்க விசாரணையை 4 மற்றும் 5 எதிரிகள் தரப்பில் ஏற்றுக்கொள்ளவதாக தெரிவித்தார். )

மறு விசாரணை இல்லை.

சாட்சி கையொப்பம்.

(ஒம்.) அதிசயராஜன்

Taken down by me in open court and read over to the witness in the presence of the accused and admitted by the witness to the correct.

(Sd./-) R.S.Praganthaa,

Judicial Magistrate, Vaniyambadi.